# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

**வகுப்பு : 6**

## தமிழ்

நேரம் : 1.00 மணி] [மதிப்பெண்கள் : 30

பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** 4X1=4

1. கதிரவனின் மற்றொரு பெயர்
(அ) புதன் (ஆ) ஞாயிறு (இ) சந்திரன் ஈ) செவ்வாய்
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ------- சுருங்கிவிட்டது.
(அ) மேதினி (ஆ) நிலா (இ) வானம் ஈ) காற்று
3. 'மா' என்னும் சொல்லின் பொருள் ----------.
(அ) மாட்டம் (ஆ) வானம் (இ) விலங்கு (ஈ) அம்மா
4. ஏற்றத் தாழ்வற்ற ---- அமைய வேண்டும்
(அ) சமூகம் (ஆ) வீடு (இ) தெரு ஈ) கிராமம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 2X1=2

5. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் ------.
6. இந்தியாவின் பறவை மனிதர் --------.

பகுதி – ஆ

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5x2=10
**வினா எண் 12–க்கு கட்டாயமாக விடையளி.**

7. இயற்கை போற்றத்தக்கது ஏன்?
8. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
9. அ) சேர்த்து எழுதுக. 1. தமிழ் + எங்கள் 2. எட்டு + திசை
ஆ) பிரித்து எழுதுக. 1. பொய்யகற்றும் 2. வெண்குடை
10. கலைச்சொற்கள் தருக.
1. Weather
2. WhatsApp
11. "தற்று" என முடியும் திருக்குறளை எழுதுக.
12. சொற்றொடர் அமைத்து எழுதுக.
அ) வாழ்நாள் ஆ) தினமும்
13. பிறமொழிக் கலப்பின்றி எழுதுக.
பெற்றோரிடம் பர்மிஷன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

பகுதி – இ

**IV. எவையேனும் இரு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2x3=6

14. தமிழ்மொழி அறியாமையை எவ்வாறு அகற்றுகிறது?
15. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு வரைக.
16. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி – ஈ

**V. அடிபிறழாமல் எழுதுக.** 1x3=3

17. "தமிழுக்கும்......." எனத் தொடங்கும் மனனப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பகுதி – உ

**VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி.** 1x5=5

18. "இயற்கையைக் காப்போம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
19. இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி உன் வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.



www.Padasalai.Net

CamScanner